**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதுகுளத்தூர்**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா, B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.), முதுகுளத்தூர்.**

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.84/2025**

**CNR. NO.TNRM08-000476-2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | இளஞ்செம்பூர் காவல்நிலையம்<br>குற்ற எண் – 19/2025 |
| | எதிரியின் விபரம் | |
| 2. | பெயர் | அரிராம் |
| 3. | த/பெ. | திருவாப்பு |
| 4. | தொழில் | விவசாயம் |
| 5. | முகவரி | தேவர்குறிச்சி,<br>கடலாடி தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 6. | வயது | 29/2025 |
| 7. | சம்பவ நாள் | 08.03.2025 ம் தேதி 19.30 மணி |
| 8. | புகார் தேதி | 09.03.2025 ம் தேதி 13.40 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 10.03.2025 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 20.03.2025 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 19.02.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 26.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.26 17:00:12 +0530

<table>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>19.02.2026</td><td>19.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>26.02.2026</td><td>26.02.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>26.03.2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 359(ii) BNSS ன் படியான மனுக்கள்</td><td>U/s.359(ii) BNSS petition filed and dismissed in M.P. No.04/2026, dated: 19.02.2026</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 348 BNSS ன் படியான மனுக்கள்</td><td>U/s.348 BNSS Petition filed and allowed in MP. No.06/2026, dated: 26.02.2026</td></tr>
<tr><td>21.</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. S. சொக்கேசன்</td></tr>
<tr><td>22.</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர்</td><td>திரு. M. இராதாகிருஷ்ணன்</td></tr>
<tr><td>23.</td><td>எதிரியின் கூற்று</td><td>எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்.</td></tr>
<tr><td>24.</td><td>தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள்</td><td>26.03.2026</td></tr>
<tr><td>25.</td><td>வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>26.03.2026</td></tr>
<tr><td>26.</td><td>நீதிபதியின் முடிவு</td><td>முடிவாக, எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Act படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும்</td></tr>
</table>



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.26 17:00:26 +0530

| | | |
|---|---|---|
| | | தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 30.05.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.03.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. இராதாகிருஷ்ணன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26.03.2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

1) கடந்த 08.03.2025ம் தேதி இரவு சுமார் 19.30 மணியளவில் நிகர்நிலைபுகார்தாரர் கார்த்திமுருகனும் அவரது பெரியப்பா மகன் திவாகர் என்பவரும் பொதிகுளம் விலக்கு ரோடு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது கார்த்திமுருகனின் அக்காவின் கணவரான இவ்வழக்கின் எதிரி குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு கார்த்திமுருகனையும், திவாகரையும் பார்த்து ஏன்டா தேவிடியா மகன்களா உங்க இருவரையும் ஒன்னா சேரக்கூடாதுனு சொல்லிருக்கேன்லடா இப்ப ஏன்டா ஒன்னா சேர்ந்து சுத்திகிட்டு இருக்கீங்க என்று கூறி கையில் மறைத்து வைத்திருந்த உருட்டு கட்டையால் கார்த்திமுருகனின் வலது பக்க தோள்பட்டையில் அடித்து வாயில் குத்தியதில் அவருக்கு நாக்கில் சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்பு திவாகரின் இடது பக்க கன்னத்தில் உருட்டுகட்டையால் தாக்கி சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்பு எதிரியானவர் கார்த்திமுருகனையும், திவாகரையும் பார்த்து ஆள்வந்ததால் இன்னைக்கு தப்பிச்சிங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல்


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.26 17:00:31 +0530

விடமாட்டேன் என்று உருட்டுகட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் இளஞ்செம்பூர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு பிரிவு 230 B.N.S.S Act–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட பின்பு எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். வழக்காவணங்களை பரிசீலித்தும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், முதல் நோக்கு வழக்கு இருந்த காரணத்தினால், எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழ் குறிப்பான குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போதும் எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)(b) B.N.S.S Act ன் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>5) அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் அசா.1 நிகர்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தில் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் தானும், அசா.2 ம் பொதிக்குளம் விலக்கு ரோடு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.26 17:00:36 +0530

தெருவில் கூட்டமாக சில நபர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்ததை சென்று பார்த்தபோது கீழே விழுந்து தனக்கும், தனது பெரியப்பா மகன் அசா.2 க்கும் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அசா.2 ம் அசா.1 ன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, இருவரும் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

ii) அசா.3 சாட்சி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்டவர் ஆவார். இவரது சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்று கூறி பிறழ்சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்.

iii) அசா.4 இளஞ்செம்பூர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தில் புலன்விசாரணை அதிகாரியான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி அவர்களுடன் பணியாற்றியுள்ளதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி மேற்படி புலன்விசாரணைஅதிகாரி அசா.1 னிடமிருந்து புகார் மனுவை பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவ இட சாட்சிகளை விசாரித்து மருத்துவ சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வழக்கின் புலன்விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>6) தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>**

i. எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.26 17:00:40 +0530

iii. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7) அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் உறவினர்கள் ஆவார்கள். இவர்களில் அசா.1 நிகர்நிலைபுகார்தாரர் ஆவார். அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் பாதிக்கப்பட்ட நபர்களாகவும் சாட்சியப்பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவார்கள். இவர்கள் இருவருமே தங்களது சாட்சியத்தில் கடந்த 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் அசா.1 மற்றும் அசா.2 பொதிக்குளம் விலக்கு ரோடு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது தெருவில் கூட்டமாக 10, 15 நபர்களுக்கு மேல் சண்டையிட்டுக்கொண்டிருந்ததாகவும், என்னவென்று அசா.1 மற்றும் அசா.2 சென்று பார்த்தபோது கூட்டநெரிசலில் கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாகவும், அதனால் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றதாக கூறியுள்ளார்கள். அசா.1ன் சாட்சியத்தில் இளஞ்செம்பூர் போலிசாரிடம் மேற்படி விபரத்தை கூறியபோது அவர்கள் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் (**அ.சா.ஆ.1**) பெற்றுக்கொண்டதாகவும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அசா.3 வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி மூவரும் பிறழ்சாட்சிகளாக அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதிலும் அவர்களின் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், புகார் மனுவானது நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.26 17:00:44 +0530

ii. மேலும், எதிரியுடன் அ.சா.1 ராசியாகிவிட்டதாகச் சொல்லி எதிரி தரப்பில் பிரிவு 359(ii) BNSS ன் கீழ் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

iii. அசா.4 இளஞ்செம்பூர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவரது சாட்சியத்தில் புலன்விசாணை அதிகாரியான திரு.பாண்டி என்பவரின் கையொப்பம் பரிட்சயம் என்று கூறி அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 09.03.2025 ம் தேதி மதியம் 13.40 மணியளவில் திரு.பாண்டி இளஞ்செம்பூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அசா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை **(அசா.ஆ.2)** பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.19/2025 பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3)** பதிவு செய்து அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியசாமி மற்றும் அஜித்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.5)** வரைந்து பார்வை மகஜர் **(அ.சா.ஆ.4)** தயார் செய்தும், அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்டுபத்தியுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iv. இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 மற்றும் அசா.2 க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சண்முகப்பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி மருத்துவர் அவர்கள் அசா.1 மற்றும் அசா.2 க்கு ஏற்பட்ட காயங்களை குறித்து கருத்து கூறஇயலாது என்று சான்று **(அசா.ஆ.6 மற்றும் அசா.ஆ.7)** வழங்கியதை பெற்றுள்ளதாகவும்,


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.26 17:00:48 +0530

வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும், அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

v. மேற்படி, சிறப்பு சார்பு ஆய்வாளர் இவ்வாறு சாட்சியம் அளித்துள்ளபோதிலும் இவரது சாட்சியத்திற்கு வலுசேர்க்கும் விதமாக வேறு எந்த சாட்சிகளும் அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவரது சாட்சியத்தை மட்டும் வைத்து வழக்கை முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi. மேற்படி, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், வழக்கு புகார் மனு நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.1 ம், எதிரியும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் சமாதானமாகி விட்டதாக பிரிவு 359(ii) BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

vii. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து,


THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.03.26 17:00:53 +0530

மேற்படி எதிரியை பிரிவு 271(1) B.N.S.S Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

viii. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.26 17:00:57 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.கார்த்திமுருகன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.திவாகர் |
| அ.சா.3 | திரு.அபிமன்னன் |
| அ.சா.4 | திரு.செந்தில்குமார் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.03.2025 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 09.03.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 09.03.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 09.03.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 09.03.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 09.03.2025 | அசா.1க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | 08.03.2025 | அசா.2 க்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.26 17:01:07 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
முதுகுளத்தூர்.